**OS.NO. 83/2011        CW–1**

நாள் : 24.03.2025

பெயர் : ராஜேந்திரன்

த/பெ : ஜெயசீலன்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றம் உங்களுக்கு வழக்கிய வாரண்டில் 2 அட்டவணை சொத்துக்களாக உள்ளது என்றால் ஆமாம். முதலாவது ஐட்டம் வரைபடத்தில் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த சந்து பெருமாள் கோயில் தெருவிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது என்றால் ஆமாம். அதைத்தான் உங்கள் வரைபடத்தில் ஏ,பி,சி,டி என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம். வடக்கு நோக்கி செல்லக்கூடிய சந்தின் முடிவில் மேற்காக ஒரு சந்து செல்வதை நீங்கள் குறிப்பிட விட்டுவிட்டீர்கள் என்றால் அந்த இடத்தில் சந்து எதுவும் இல்லை கருவேலமரம் தான் உள்ளது. வடக்கு நோக்கி செல்லக்கூடிய சந்தில் கேட் எதுவும் இல்லை என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது தவறு அந்த இடத்தில் கேட் இருக்கிறது என்றால் இல்லை அவ்வாறு கேட் இருந்தால் என்னுடைய வரைபடத்தில் நான் சுட்டி காட்டியிருப்பேன்.அந்த இடத்தில் கழிவு நீர் தொட்டி இருந்ததா என்றால் இல்லை. மண் போட்டு மூடப்பட்டிருந்தது.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU    Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.